

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், உடல் நலக்குறைவால் காலமான இந்திய சமூக நீதி இயக்கத்தின் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களின் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ள சென்னை, வானகரத்திற்கு நேற்று (26.9.2024) நேரில் சென்று அவரது உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, அவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜோசப் சாமுவேல், க.கணபதி, இந்திய சுவிஷேச திருச்சபை (ECI) பிரதம பேராயர் டாக்டர் டேவிட் ஒநேசிமு, சென்னை பேராயர் கதிரொளி மாணிக்கம் ஆகியோர் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், பல்கலைக்கழக இணைவேந்தருமான மா.சுப்பிரமணியன் நேற்று (26.09.2024) சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக கூட்டரங்கில் மருத்துவத்தின் செயற்கை நுண்ணறிவு கருத்து கட்டுரை தொகுப்பு புத்தகத்தை (Concept Competitions collection of Articles) வெளியிட்டார்கள். இந்நிகழ்வில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக துணை வேந்தர் பேரா.மரு.கே. நாராயணசாமி, மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.ஜெ.சங்குமணி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப்பல்கலைக்கழக பதிவாளர் மரு.பி.ஆறுமுகம், பாடத்திட்ட மேம்பாடு (ம) மருத்துவக்கல்வி துறைத் தலைவர் மரு. ராதிகா, அனைத்து மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உடனிருந்தனர்.

### மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் - மறைந்த

# பேராயர் எஸ்றா சற்குணத்திற்கு - காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, செப்.27-**

**மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பேராயர் எஸ்றா சற்குணம் அவர்களுக்கு காவல்துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

உடல் நலக்குறைவால் 22.9.2024 அன்று காலமான மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் பேராயர் எஸ்றா சற்குணம் (வயது 86) அவர்களது உடலுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.09.2024) காலை நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்.

எஸ்றா சற்குணம் அவர்கள் தமிழ்ச் சமூகத்திற்கு, குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, தனது இறுதி நாள் வரை தொடர்ந்து சேவை ஆற்றி வந்துள்ளார்கள்.

நேற்று (26.9.2024) சென்னை, கீழ்ப்பாக்கம், கீழ்ப் பாக்கம் கார்டன் காலனியில் உள்ள கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரது உடலுக்கு காவல் துறை மரியாதையுடன் இறுதி அஞ்சலி செலுத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முன்னாள் பிரதமர் - டாக்டர் மன்மோகன் சிங்கின்

# விலைமதிப்பற்ற சேவை எந்நாளும் நினைவுகூரப்படும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தி!

சென்னை, செப். 27 -

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்களின் விலை மதிப்பற்ற சேவை எந்நாளும் நினைவு கூறப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில் பாராட்டியுள்ளார்.

முன்னாள் இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் பிறந்த நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு எனது இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்!

**அவரது தொலைநோக்கு மிகுந்த தலைமைத்துவமும், இந்தியாவின் பொருளாதாரத்தை**



**மாற்றியமைப்பதில் விலைமதிப்பற்ற சேவையும் எந்நாளும் நினைவுகூரப்படும்.**

**அடுத்து வரும் பல தலைமுறைகளைத் தமது மதிநுட்பத்தாலும் அர்ப்பணிப்பாலும் அவர் தொடர்ந்து ஊக்குவிக்கட்டும்!**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனது வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

### சென்னை - சேப்பாக்கம் பொதுப்பணித்துறை கூட்டரங்கில்

# திருச்சி மண்டலப் பொதுப்பணித் துறையின் மூலம் நடைபெற்று வரும் பணிகள்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு!

சென்னை, செப். 27 -

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு திருச்சி மண்டலப் பொதுப்பணித்துறையின் மூலம் கட்டப்பட்டு வரும் கட்டடப் பணிகள் குறித்து. நேற்று (26.09.2024) சென்னை, சேப்பாக்கம் பொதுப்பணித் துறை கூட்டரங்கில் ஆய்வு மேற்கொண்டார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட பணிகள், பொதுப் பணித்துறையின் அறிவிப்புகள் மற்றும் இதர துறையின் அறிவிப்புகளில், நிறைவேற்றப்பட்ட அறிவிப்புகள், நிலுவையிலுள்ள அறிவிப்பு பணிகளின் முன்னேற்றம் ஆகியவற்றை கேட்டறிந்த அமைச்சர் அவர்கள், நிலுவையிலுள்ள அறிவிப்பு பணிகளை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் அவர்கள், ஆய்வுக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைத்து பொறியாளர்களையும் வரவேற்று, ஆய்வுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்து, உரையாற்றுகையில், எந்த கட்டுமானப் பணியானாலும் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

கண்காணிப்புப் பொறியாளர்கள், பொது மக்கள் பயன்பாட்டில் உள்ள மருத்துவமனை மற்றும் பிற முக்கிய கட்டடங்களை அவ்வப்போது ஆய்வு செய்து, ஆய்வுக் குறிப்புகளைப் பதிவு செய்திட வேண்டும் என்றும், பொதுப் பணித்துறையின் தரக்கட்டுப் பாட்டுக் கோட்ட பொறியாளர்கள், அனைத்து கட்டடப் பணிகளையும் அவசியம் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

தமிழ்நாடு அரசின் முத்திரைத் திட்டப் பணிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, குறித்த காலத்தில் கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்றும், புதிய கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கான மதிப்பீடு தயாரித்தலில் பயன்பாட்டு துறையிடம் அவர்களுடைய தேவையை கேட்டறிந்து, அதன்படி வரைப்படம் தயாரிக்கப்பட வேண்டும் என்றும், கட்டடம் கட்டுவதற்குமுன் திட்ட உருவாக்க நிதியைப் பயன்படுத்தி மண் பரிசோதனை செய்து, மண் தன்மைக்கு ஏற்றவாறு கட்டடங்கள் உறுதித் தன்மையுடன் கட்டப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். இதன் மூலம் திருந்திய நிர்வாக அனுமதியினை தவிர்க்க முடியும் என்று தெரிவித்தார்.

மேலும், கட்டடக் கலைஞர்கள் கட்டட வரைபடங்கள் தயாரிக்கும்போது, கட்டடங்களில் அமைக்கப்படும் கழிவுநீர் குழாய்கள் வெளியேறும் பகுதி, மின் அமைப்புகள் உள்ள பகுதிகளில் கான்கிரிட் போன்ற அமைப்புகள் சரியான முறையில் வடிவமைக்க வேண்டும் என்றும், கட்டடங்களில் நீர்கசிவு ஏற்படாத வண்ணம் தேவையான வாட்டர் ப்ரூப் நடைமுறைகளை அவசியம் பயன்படுத்த வேண்டும் என்றும், எம்சாண்ட் சுவர் பூச்சு பயன்பாட்டிற்கு தேவையான கெமிக்கல் கலவை பயன்படுத்த வேண்டும் என்றும், மின் பொறியாளர்கள் அவ்வப்போது மின் அமைப்புகளை ஆய்வு செய்து, மின் கசிவு ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

புதிய முத்திரைத்திட்ட கட்டடப் பணிகளில், பசுமைக் கட்டடம்(Green Building Concept) வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் அவர்கள் உரையாற்றியபின், பொதுப்பணித் துறை திருச்சி மண்டலத்தின் மூலம் நடைபெற்று வரும் அனைத்து கட்டடப் பணிகளையும் ஒவ்வொன்றாக ஆய்வு செய்தார். முதலமைச்சர் அவர்களால், அறிவுக்கப்பட்ட திருச்சியில் அமையவுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டட மதிப்பீடு உடனடியாக சமர்ப்பித்து, பணிகள் தொடங்கிட அறிவுரைகள் வழங்கினார். ரூ.110 கோடி மதிப்பீட்டில், திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனை சிறப்பு சிகிச்சைப் பிரிவு கட்டடம், ரூ.42 கோடி மதிப்பீட்டில், தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை புற்றுநோய் சிகிச்சை பிரிவு கட்டடம், ரூ.25 கோடி மதிப்பீட்டில், அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ரூ.46 கோடி மதிப்பீட்டில் புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி, அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ரூ.45.50 கோடி மதிப்பீட்டில், மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம், ரூ.34 கோடி மதிப்பீட்டில், கடலூர் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டடங்கள் ஆகிய கட்டடப் பணிகள் குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் மங்கத்ராம் சர்மா, முதன்மைத் தலைமைப் பொறியாளர் கே.பி.சத்தியமூர்த்தி, தலைமைக் கட்டடக் கலைஞர் திருமதி.இளவேண்மாள், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் செந்தில், சிறப்பு பணி அலுவலர் இரா.விஸ்வநாத், கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கழக பொருளாளர் - மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி.

### மாவட்டச் செயலாளர் -அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! டாக்டர்.ஜி.சாந்தகுமாரி எம்.சி. தலைமை!

# பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழா - மாபெரும் மருத்துவ முகாம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் மருத்துவ முகாமை துவக்கி வைக்கிறார்!

சென்னை, செப். 27-

சென்னை கிழக்கு மாவட்ட மருத்து அணி சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்-4வது நிகழ்ச்சியாக "மருத்துவம் உயிரின் அவசியம்! வாழ்வினில் ஒளி நம் திராவிடம்!" என்ற தலைப்பில் மாபெரும் மருத்துவ முகாம் 29.09.2024, ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளிவில், சென்னை, அம்பத்தூர், பேங்க் ஆப் பரோடா தெரு, எஸ்.எம்.கே. மஹாலில் நடைபெறுகிறது.

இப்பொதுக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி. தலைமை வகிக்கிறார். கழக பொருளாளர்-கழக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப் சாமுவேல் எம். எல்.ஏ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், வி.ரமேஷ்(எ) நீலகண்டன் எம்.சி, எல். பி.எஃப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, ஜெ.பாலமுருகன், து.ஆயிரம், கு.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். டாக்டர். பெ.வெற்றிகுமார், டாக்டர்.எம்.ஜெ.திவ்யானந்தன், டாக்டர்.இ. வினோத், டாக்டர்.வி. சுதர்சன், டாக்டர்.இ. வினேஷ், டாக்டர்.பெ. பூபாலன், டாக்டர்.வி. ஜி.சந்தோஷ்ராஜ், டாக்டர்.கே.ஜே.சுவாதி, டாக்டர்.கோ.சந்தோஷ்குமார், டாக்டர்.எச்.பிரத்யுஷா ஆகியோர் வரவேற்று பேசுகின்றனர்.

இம்மாபெரும் மருத்துவ முகாமை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

மேலும், மேயர் ஆர். பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ. அ.வெற்றி அழகன் எம்.எல்.ஏ, பி. டி.சி.செல்வராஜ். மாநில நிர்வாகிகள்: ப.ரங்காநாதன், கே.எஸ்.இரவிச்சந்திரன் கே. சந்துரு, சி.மகேஷ்குமார், சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி வே.உமாகாந்த், கே.எஸ்.எம். நாதன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, பரிதிஇளம்சுருதி எம்.சி. ஆர்.வரதன், மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், தேவஜவகர், டி.ராதாகிருஷ்ணன், புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட் ஆசாத் எம்.சி. மண்டலகுழு தலைவர்கள்: கூ.பீ.ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி, பகுதி கழக செயலாளர்கள்: ஐ.சி. எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி, வே.வாசு, சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, எஸ். இராஜசேகர், எஸ்.முரளி. பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, எஸ்.பன்னீர்செல்வம், டி.வி.செம்மொழி எம்.சி, பி.ஜெ.துளசிங்கம், பி.உதயசங்கர், சாவித்திரிவீரராகவன், எம்.இப்ராஹிம்கனி, அ. நிர்மலாதேவி, இரா. கலைச்செல்வி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜெ.பிரபு, எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, வானவில்விஜய், சுதா தீனதயாளன் எம்.சி., ராஜேஸ் வரிஸ்ரீதர் எம்.சி, நா.துலுக்காணம், ஜி.தாமோதரன், துரைகண்ணன், எம். பெரோஸ்கான், பி.விஜயகுமார், எம்.விநாயகம், ஆர்.எஸ்.சித்திக், க.பா.பிரதீப்குமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், கா.ராஜ்முகமது, அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள்: எம்.கமல் எம்.சி, க.பொற்கொடி எம்சி, எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி. அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி நிர்வாகிகள்: மா.பச்சையப்பன், அ.செல்வம், க.முரளிபாபு, க.கதிஜா, மா.ரமேஷ், மு.நடராஜன், து.செல்வராஜ், ஆர்.கதிரவன், எஸ்.கவிதா செல்லதுரை, கு.சங்கர், து.ஜெகநாதன், பி.ஆர்.இளங்கோவன், பா.பொற்செழியன், ரா.லட்சுமிரங்கநாமி, மேனாம்பேடு இ.ராமு. அம்பத்தூர் வடக்கு தெற்கு கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: வே. ரவீந்திரன், பு.வீரா, வி.ராதாகிருஷ்ணன் டி.கண்ணபிரான், த.பிரகாஷ்குமார், சி.சீனிவாசன், நா.நெப்போலியன், இரா.டீக்கா, சீ.லோகநாதன், சு.மோகன்குமார், மு.சண்முகம், ஆ.சுந்தராஜ், மு.விஜயகுமார், த.வலால் ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

81வது வட்ட கழக செயலாளர் மு.இரகு, அம்பத்தூர் தொகுதி மருத்துவ அணி துணை அமைப்பாளர் டாக்டர்.வி.அன்பு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



நேற்று (26.09.2024) துணை மேயர் மு.மகேஷ்குமார் தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி அடையாறு மண்டலம், 169ஆவது வார்டு அலுவலகத்தில் ஏரியா சபைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மற்றும் மின் வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட சேவைத்துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 36வது வட்ட திமுக சார்பில் பொது உறுப்பினர்கள் கூட்டம் வட்டக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ஆர் மலைச்சாமி எம்.சி. தலைமையில் பகுதி கழக செயலாளர் க.ஜெயராமன் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். இதில் இரா.நரேந்திரன், இரா. கருணாநிதி, எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.தமிழ்ச்செல்வன், டி. கமலக்கண்ணன், ப. மதிவாணன், பகுதி கழக நிர்வாகிகள் சாகுல் ஹமீது, வி.வேதா, வி.எஸ்.பிரபு மற்றும் கழக முன்னோடிகள், பாக முகவர்கள், கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். வட்டத் துணைச் செயலாளர் கே.வி சோமசுந்தரம் நன்றி கூறினார்.